முருகப்பெருமான் துணை

**மகான் கவுபாலச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.05.2023**, வெள்ளிக்கிழமை

1. மாதவராஜனே அரங்கா
   மக்களை காத்திட வந்த
   மாதவசியே ஞான தேசிகா
   மண்ணுலகில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது விடை திங்கள்
   குறைவிலா வியதிகதி புகர்வாரம்

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 12 ம் நாள், 26.05.2023, வெள்ளிக்கிழமை)

   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனுக்கு கவுபாலச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உலகமாற்றம் செய்ய வந்த
   ஞானமார்க்கமாம் அரங்கமகானின்
   நாட்டிடுவேன் சன்மார்க்கம் தானும்
4. தானுரைக்க வேலவன் காட்டும்
   தக்கநெறியாகவே ஏற்றுமே
   ஞானம்பயில உலக மக்களுக்கு
   நாட்டிடுவேன் சிந்தை தெளிவு
5. தெளிவுற சிறப்பறிவுக் கூடி
   தேசிகனே கலியிடரை வென்று
   அழியாமை தரவல்ல மகானும்
   ஆறுமுகனாரின் அம்சமும் எனும்
6. எனும் உண்மை விளங்கி
   இனிதே அரங்கன் காட்டும்
   ஞானவழியை இறுகப் பற்றி
   நம்பிக்கைக் கூட்டி தொடர நேரும்
7. நேருமை கொண்டு வாழவும்
   நிலவுலகை வழிநடத்த ஞானிகள்
   தருவர் பாதுகாப்பு ஆதரவெனும்
   தக்கபலமும் கூடி மக்கள் தேறுவர்

8. தேறவே அரங்கன் ஆசிபலம்
திங்கள் தோறும் தினமுமென
வரமாக மக்கள் அடைந்துவர
வந்தடையும் மேல்நிலைகள் தானும்

9. தானாக ஆற்றல் பெருகி
தவதரும சக்தியும் பெருகி
ஞானமாக ஞானியுமாக
நாட்டிடுவேன் அரங்கன் தேடலில்

10. தேடலில் அவரவர் தேர்வுமாகி
தெரிவிப்பேன் உலகை மாற்றும்
இடரில்லா தலைமைகளாக
எல்லாம் நன்மைபட நடத்தும்

11. நடத்தும் ஞான வழிகளாக
ஞானயுகமாற்றமாக நிகழ்த்தி
தடையற ஞான ஆட்சிபடைப்பர்
தாமுரைத்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—